**06.03.2026**

**CC 133/2013**

**PW.2. Thamizhselvi W/o.Thirunavukkarasu.**

**எதிரி ஆஜர் எதிரி தரப்பு வழக்கறிஞர் ஆஜர்.**
**சாட்சி மீண்டும் அழைக்கப்பட்டு குறுக்கு விசாரணை :**

1. நான் அரசு நிதியுதவி பெறும் பள்ளியில் ஆசிரியராக பணிபுரிந்து ஓய்வுபெற்றுவிட்டேன். 30.11.2022ல் பணி ஓய்வு பெற்றேன். நான் வருமானவரி செலுத்திவருகிறேன். நான் National Higher Secondary பள்ளி, குடியாத்ததில் பணியாற்றி ஓய்வு பெற்றேன்.

2. நான் பள்ளியில் சேர்ந்த காலத்தில் இருந்து தற்போது வரை வருமானவரி செலுத்திவருகிறேன். எனக்கான வருமானவரி நான்தான் செலுத்திவருகிறேன் என்றால் சரிதான்.அரசு பள்ளியில் பணிபுரிந்ததால் யாருக்காவது கடன் கொடுக்கவேண்டும் என்றால் உயர்அதிகாரிகளின் அனுமதிபெற்றுதான் கொடுக்கவண்ேடும் என்ற விவரம் எனக்கு தெரியுமா என்றால் தெரியாது.

3. ரூ.20000ல் இருந்து 25000 வரை கடன் கொடுக்கவேண்டும் என்றால் உயர்அதிகாரிகளின் அனுமதிபெறவேண்டும் என்ற விதி எனக்கு தெரியும் என்றாலும்,வழக்கிற்காக தெரியாது என்று பொய்சாட்சி அளிக்கிறேன் என்றாலும் சரியல்ல.

4. எனது கணவர் யாரிடம் பணம் கடனாக கொடுத்தார் என்ற விவரம் எனக்கு தெரியும். எனது கணவரிடம் கொடுத்த பணம் என்னுடைய சம்பாத்தியத்தில் சேமிப்பில் இருந்து கொடுத்தது என்றால் சரிதான். எனது கணவரிடம் பணம் கொடுத்த விவரத்தை வருமானவரி கணக்கில் காட்டியுள்ளேனா என்றால் எனக்கு தெரியாது.

5. 01.04.2012 முதல் 31.03.2013 வரை வருமானவரி செலுத்திய விவரத்தை நீதிமன்றத்தில் தாக்கல் செய்ய தயாராக உள்ளேனா என்றால் அவசியபட்டால் தாக்கல் செய்வேன்.

**(மேற்படி வருடத்திற்கான வருமானவரி தாக்கல் செய்தால் அதன் உண்மை நிலவரம் தெரியவரும் என்பதால் வழக்கின் குறுக்கு விசாரணை ஒத்திவைக்கப்படுகிறது. )**

Sd/–R.Saranya.,
Judicial Magistrate,
Gudiyatham.